13—

சமுதாயக் கூடம்

***5866—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சித்தார்கோட்டை ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சித்தார்கோட்டை ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழிவில்லாத ஆத்மாவிற்குச் சொந்தக்காரர்களாம் என் தெய்வத் திருமகனாரையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, முதல்வர், துணை முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு."

ஆற்றல்மிக்க படை, நாட்டுப்பற்றுள்ள மக்கள், குறையாத செல்வம், நாட்டின் நலமறிந்து செயல்படும் அமைச்சர், துன்பத்தில்

2020 செப்டம்பர் 16]

உதவும் அண்டை மாநில நட்பு, அழிக்க முடியாத காவல் இந்த ஆறும் உடைய அரசே ஆண் சிங்கம் போன்றது. இந்தத் திருக்குறள் விவரிக்கும் திருவாளர் மானமிகு, மாண்புமிகு முதல்வர் அவர்களே, இந்த நான்கு ஆண்டுகளில் எத்தனையோ சோதனை, அத்தனையையும் சாதனையாக மாற்றி சரித்திரத்தில் இடம் பிடித்தவர் நீங்கள். இதுவரை வாழ்ந்து மறைந்த முதல்வர்கள் இமயம் உயர்ந்த இடர்களைச் சந்தித்திருந்தாலும், நீங்கள் சந்தித்த இடர்கள் வானம் தாண்டியது. தன் இதயம் வலிக்கும் இடர்கள் வந்தபோதும், அதைச் சுடராக மாற்றி மக்களுக்கு வெளிச்சம் காட்டியவர் நீங்கள். அரசியல் பேரிடர்கள் ஒருபுறம், இயற்கை பேரிடர்கள் மறுபுறம். இப்பேரிடர்கள் அத்தனையையும் ஆறுபடை சாமிபோல் வீறுநடை போட்டுவந்து வென்ற சாமி எங்கள் சாமி எடப்பாடி பழனிசாமி. (மேசையைத் தட்டும் ஒலி) அடிப்படைத் தொண்டனாய் இருந்து இன்று படிப்படியாய் முன்னேறிய வெளிப்படையான முதல்வர் எடப்பாடியார். மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த எளிமையான மனிதர், வலிமையான தலைவர், நீங்கள் நேற்றையும் வென்றீர், இன்றையும் வென்றீர், நாளையும் வெல்வீர். (மேசையைத் தட்டும் ஒலி) நாற்பது வருட அத்திவரதரையும் பார்த்துவிட்டீர், நாற்றங்காலில் இறங்கி நாட்டு மக்கள் மனதையும் தொட்டுவிட்டீர். மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்ற அம்மாவின் அறச்சொற்களை இதய அணிகலன்களாய் அணிந்து, அம்மாவின் தொண்டனாய், அம்மா அரசின் சேவகனாய் உயர்ந்துவிட்டீர்கள். எம்.ஜி.ஆர்.-க்கு நூற்றாண்டையும் கொண்டாடிவிட்டீர்கள். பத்தாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி. அவர்கள் வேண்டிய எந்தச் சாமியும் செய்யாததை எங்கள் பழனிசாமி செய்துவிட்டார். ஆம். நீங்கள் மாணவர் சமுதாயத்தின் மனப்பாடமாய் மாறிவிட்டீர்கள். (குறுக்கீடு) arrear *மாணவர்களின் அரசனாய் மாறிய உங்களை, மானமிகு மாணவர்கள் மாண்புமிகு முதல்வராய் எப்போதும் பார்ப்பர். (குறுக்கீடு) உங்களின் 4 ஆண்டு ஆட்சியில் விளைந்த நல்ல திட்டங்களை விவரிக்க அவையில் நேரமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், வரலாற்றில் உங்களைப்போல் அரசியலில் வென்றவர் எவருமில்லை, இதில் துளிகூட பொய்யில்லை.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலத்திற்குட்பட்ட பகுதியில்

சமுதாயக் கூடம் கட்டுவதற்காக, மக்களின் நீண்டநாள் குறை தீர்க்க நான் இந்த அவையில் எடுத்துரைத்தபோது, 'உங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 23 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி மேற்கொள்ளலாம்' என்று மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்பணியை நிறைவேற்றுவதற்கு எனது தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் போதுமான நிதி வசதி இல்லாததால் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியின்கீழ் சித்தார்கோட்டை ஊராட்சியில் மக்களின் பயன்பாட்டிற்கு சமுதாயக் கூடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சித்தார்கோட்டை ஊராட்சியில் 7 குக்கிராமங்கள் உள்ளன. அதில் சுமார் 1,512 மக்கள் வசித்து வருகின்றனர். இவ்வூராட்சியில் உள்ள சித்தார்கோட்டை கிராமத்தில் 436 மக்கள் வசித்து வருகின்றனர். இந்த ஊராட்சிக்கு அருகில் சமுதாயக் கூடம் ஏதுமில்லை. இந்த ஊராட்சியில் அனைத்து சமுதாய மக்களும் வசித்து வருவதால் சமுதாயக் கூடம் அமைப்பது அவசியமாகிறது.

பொதுவாக, ஊராட்சிகளில் சமுதாயக் கூடம், சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்பேரில், சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் கட்டப்படுகிறது. சித்தார்கோட்டை ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட மேலசேத்தனேந்தல் காளி கோயில் அருகில் போதுமான இட வசதி உள்ளதால் அங்கு புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையில் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் அனைவரிடத்திலும், என்னுடைய பெயர் சொல்லுமாறும், அம்மாவினுடைய அரசினுடைய பெயர் சொல்லுமாறும் என்னுடைய திருவாடனை தொகுதியில் ஏதாவது ஒரு திட்டத்தைச் செய்து கொடுங்கள் என்ற வேண்டுகோளை தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறேன். என்னுடைய திருவாடனை தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகவும், வறட்சியான ஒரு பகுதியாகவும், தொழில் வளங்கள் இல்லாத ஒரு தொகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால், வரக்கூடிய நாட்களில் தாங்கள் அனைவரும் இதற்கு உடன்பட்டு தங்களால் இயன்ற ஏதாவது ஒரு நலத் திட்டத்தை, மக்களுக்கான பணியை செய்ய வேண்டுகிறேன். கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட நேரத்தில் எனக்கு உறுதுணையாக இருந்து, அன்போடு என்னை அழைத்து என்னுடைய நிலையை அறிந்து, உடனடியாக சென்னை மருத்துவமனைக்கு வரவழைத்து, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் விஜய பாஸ்கர் அவர்களிடத்தில் சொல்லி, எனக்கு மருத்துவ உதவி செய்து கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசிற்கும், அனைத்து மக்களுக்கும் குறிப்பாக தொகுதி மக்களுக்கும், நான் சார்ந்த முக்குலத்தோர் புலிப்படைக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

சட்டக் கல்லூரி

***69697—திரு. எம். தமிமுன் அன்சாரி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—